மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏனாதவாடி கிராமத்திற்கு சிறப்புக் கவனம் செலுத்தி அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, ஏனாதவாடி கிராமத்திற்கு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

19—

சிறப்புப் பயிற்சி மையங்கள்

***56146—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துவங்குவதற்காக சிறப்புப் பயிற்சி மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி முதற்கண் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்வழியில் வெற்றிநடை போடும் தமிழகத்தை தலைமையேற்று நடத்திவரும் சாமானிய முதல்வர், வெற்றிடம் என்று சொன்னவர்களுக்கு மத்தியில், தனது நிருவாகத் திறமையினால் 'வெற்றி இடமாக'

2021 பிப்ரவரி 5]

மாற்றி, சோதனைகளை எல்லாம் வென்றெடுத்து, சத்தமில்லாமல் சாதனைகளுக்கு மேல் பல சாதனைகளைப் புரிந்து, வரலாறு படைத்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உண்மையான அரசு என்பதை நிரூபித்து, இருபெரும் தலைவர்களாக விளங்கிவரும் புரட்சித் தலைவருக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் விழாக்கள் கண்டு, பெருமைகள் சேர்த்து, நல் ஆளுமைக்கு இலக்கணமாய், 'குடிமராமத்து நாயகராய்' மருத்துவம் தந்த மகராசனாய், மாணவர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு உறுதுணையாய், அமைதியின் திருவுருவாய், கண்ணியமும், மனிதநேயமும் கொண்ட ஜல்லிக்கட்டு நாயகராம் தென்பாண்டி சிங்கம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 11–10

(அ) மற்றும் (ஆ) சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (Entrepreneurship Development and Innovation Institute) தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில்முனைவு சார்ந்த பயிற்சிகளை நேரடியாகவும், அந்தந்தப் பகுதியில் உள்ள தொழில்முனைவு சார்ந்த பயிற்சிகளை அளிப்பதில் திறன்பெற்ற அமைப்புகளுடன் இணைந்து தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களில் தொழில்முனைவோர்களுக்கு வங்கிமூலம் செயல்பட்டுவரும் கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் மூலமும், Vellore Institute of Technology மூலமும், தொழில்முனைவு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது திருப்பத்தூர் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வரும் நிலையில், மாவட்ட அளவிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கம் மற்றும் பிற தொழில் சார்ந்த பயிற்சி அளிக்க திறன்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, தொழில்முனைவு பயிற்சிகள் வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

விரைவுப் பேருந்து வசதி

***50964—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதி, கம்பத்திலிருந்து திருப்பதிக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(ஆ) மற்றும் (ஆ) கம்பம்–திருப்பதி தடம் தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களும் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் பேருந்து இயக்குவது குறித்து அடுத்து நடைபெறவிருக்கும் இரு மாநில பேச்சுவார்த்தையின்போது பரிசீலிக்க இயலும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், தங்கத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். விவசாயிகளின் தோழன் என்றும், குடிமராமத்து நாயகன் என்றும் காவேரிக் காப்பாளன் என்றும் போற்றப்பட்டு, இன்று வெற்றிநடைபோடுகின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களுக்கும், அன்பின் அடையாளமாய், பண்பின் உறைவிடமாய், பாண்டிய*